# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள் - **12.06.2025**</u>

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)

## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 15041/SCIC/2023</u>**

திரு.S.ஞானசேகர் த/பெ.வீ.சிவனாண்டி
காமாட்சி நகர் மேல்முறையீட்டாளர்
அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி எதிரில்
செக்கணூரணி,
மதுரை - 625 514.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை.

**<u>ஆணை</u>**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 07.03.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.04.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.07.2023 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 22.08.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.10.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 24.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், திருமங்கலம் சார்பதிவகம், மதுரை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4(1)(b) இன் கீழ் மதுரை தெற்கு பதிவு மாவட்டம் திருமங்கலம் சார்பதிவகம் எனும் பொது அதிகார அமைப்பில் பணிபுரிகின்ற ஊழியர்களின் பணிகள் மற்றும் கடமைகள் பற்றிய விவரம் தகவலாக வழங்கவும்” என்பன போன்று 5 (ஐந்து) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (12/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் மதுரை மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் பொதுத் தகவல் அலுவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.க.நல்லகுமார், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருமங்கலம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் 12/07/2023 தேதியிட்ட பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு அப்போதைய (12/07/2023 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் திரு.ராஜ்குமார், (தற்போது) துணைப் பதிவுத்துறைத் தலைவர், செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்சொன்ன திரு.ராஜ்குமார் என்பவர் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்சொன்ன காரண விளக்கத்தைப் பெற்று ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.**

**3. பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரருக்கு 10/04/2023 தேதியிட்டு இனவாரியாகத் தகவல்களை அனுப்பியுள்ளதோடு, மீண்டும் 21/10/2024 தேதியிட்டும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 24/12/2024 தேதியிட்டு தனது ஆட்சேபணை கடிதத்தை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இன்றைய விசாரணையின் போதும், மனுதாரர், தனக்கு பொதுத் தகவல் அலுவரால் அனுப்பியுள்ள தகவல்கள் சரியானதல்ல எனத் தெரிவித்தார். இனம் 1-க்கு பிரிவு 4 (1) (b)-ல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு விவரங்களை பொது வெளியில் வெளியிடும்படியான நடவடிக்கையினை கடைபிடிக்கப்படவில்லை என்று புகார் தெரிவித்தார். மனுதாரரின் கூற்றினை ஆணையம் பதிவு செய்து கொள்கிறது. இதுகுறித்து, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் தலைமை தகவல் ஆணையர், தான் பொறுப்பேற்றவுடன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பிரிவு 4 (1) (b)-ஐ முறையாக தமிழக அரசின் அனைத்து துறை செயலாளர்களும், துறைத் தலைவர்களும் கடைபிடிக்க வேண்டுமென்று அறிவுறுத்துமாறு 31/07/2023 தேதியிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார் என்று மனுதாரருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, பதிவுத்துறையின் பொது அதிகார அமைப்பு 4 (1) (b)-க்கான உரிய நடைமுறைகளை விரைந்து எடுக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இவ்விவரத்தை, மனுதாரரிடமும் ஆணையம் தெரிவித்துக் கொண்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர், மற்ற இனங்களுக்கான தகவல்களை ஆவணங்களின்படியான உரிய தகவல்கள் மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதனை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. இனம்-5-க்கு, மனுதாரர் ஏற்கனவே, தமது அலுவலகத்திற்கு வருகை புரிந்து பதிவேடுகளைப்**

**பார்வையிட்டுள்ளார் என பொதுத் தகவல் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தான் பதிவேடுகளைப் பார்வையிட்டதை ஒப்புக் கொண்டதோடு, தான் கோரியவாறு, தனக்கு 79 பக்கங்களைக் கொண்ட பதிவேடுகளின் நகல் அளிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். இதற்கு, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் ஒரு முழுமையான கிராமத்தின் விவரங்களைக் கோருவதாகவும், அவ்விவரங்கள் மூன்றாம் நபர்களும் சம்பந்தப்பட்டவையாக உள்ளது எனத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையினை ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15041/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-28

2. பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை.

3.திரு.ராஜ்குமார்
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
(தற்போது) துணைப் பதிவுத்துறைத் தலைவர்
செங்கல்பட்டு மண்டலம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு.S.ஞானசேகர் த/பெ.வீ.சிவனாண்டி
காமாட்சி நகர், அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி எதிரில்
செக்கணூரணி,
மதுரை - 625 514.

நகல்
பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35
RG/PC